## தலைப்பு 437 - விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயாயம்

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2022 யூன் 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

இந்த நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள்,

செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,
  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 மே 26 ஆந்திகதிய ரீஓடி/ஆர்ஈபி/எம்2/01 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கைகளின் 02 ஆம் பந்தியின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டில் சேகரிக்க வேண்டிய வருமான மதிப்பீடுகள் நிதிப்பிரமாணங்கள் 85(1), (2) இணங்கக்கூடிய வகையில் செயற்திறன்வாய்ந்ததாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டு திறைசேரி செயற்பாடுகளின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். எனினும், இலங்கை சிவில் விமான அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்டு திறைசேரிக்கு அனுப்பப்படவேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட இறக்குமதி வரி குறித்த திகதியில் தயாரிக்கப்பட்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு இணங்கப்பட்டது. | இறக்குமதி வரி வருமானங்களின் மதிப்பீடுகள் குறித்த திகதியில் தயாரிக்கப்பட்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 85 (2) (அ) இன் பிரகாரம் ரூபா 19 பில்லியன் அடிப்படை வருமானம் ரூபா 4 பில்லியனுக்கு மாற்றப்பட்டதற்கான அறிக்கைகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்துவதற்கு இணங்கப்பட்டது. | அடிப்படை வருமான மதிப்பீடுகள் தொடர்ச்சியாக சீரமைக்கப்பட்டால் அது பொருளாதார அலுவல்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டு சீரமைக்கப்பட்ட அறிக்கைகள் பராமரிக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 128 (2) (இ) இன் பிரகாரம் வருமான நிலுவைகள் இல்லாதபோது அரையாண்டு அறிக்கைகள் அல்லது வெற்று அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலே 2.1 (ஆ) இல் குறிப்பிட்டவாறு | வருமான நிலுவைகள் மீதான அரையாண்டு அறிக்கைகள் குறித்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிகழ்ச்சித்திட்டம் இலக்கம் 01 இல் 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 6,000,000 ஆன நிதியேற்பாடு 100 சதவீதம் எஞ்சியிருந்தது. அதற்குமேலதிகமாக, நிகழ்ச்சித்திட்டம் இலக்கம் 01 இல் 06 ஏனைய செலவீனங்களிற்காக 2021 இல் எஞ்சியிருந்த மீதியானது ரூபா 1,044,819,642 ஆகவிருந்தது. இது அத்தகைய செலவீன விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 55 சதவீதத்திலிருந்து 95 சதவீத வீச்சிலிருந்தது. | நிதியேற்பாடு எஞ்சியிருந்தமைக்கு கொவிட் தொற்றுநோய் நிலமை பிரதான காரணமாக அமைந்திருந்தது. | நிதியேற்பாட்டினை உரிய வகையில் பயன்படுத்துவதன் மூலம், எதிர்பார்த்த நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேணடும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 2,085,964,000 தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதில் 53.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 116,928,632 தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட் பரவல் நிலைமையால் வழமை போல் அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்திருக்கவில்லையென்பதுடன் உத்தியோத்தர் வருகை | மேலே (அ) இல் குறிப்பிட்டவாறு |

| | | |
|---|---|---|
| | மட்டுப்படுத்தப்பட்டதுடன் எதிர்பார்க்கப்பட்டவாறு வெற்றிடங்களை நிரப்ப முடிந்திருக்காமை போன்றன புதிய கட்டிடத்திற்கு கடமைகளை மீளக்கொண்டுவருவதற்கு காலதாமதத்தை ஏற்படுத்தியது. | |
| (இ) 2021 ஆம் ஆண்டுடன் தொடர்பில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 02 ஆம் இலக்கத்தின் கீழான ஏற்றுமதி வலய அபிவிருத்தியின் கீழ் ரூபா 1,900,000,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 859,000,000 செலவழிக்கப்பட்டிருந்ததுடன் இது தேறிய ஏற்பாட்டில் 45 சதவீதமாக மாத்திரமிருந்தது. இந்த ஏற்பாட்டுடன் தொடர்பில்லாத செலவொன்றாகவுள்ள மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு ஓடபாதையை நிர்மாணிப்பது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகையொன்றாகவிருந்த ரூபா 53.6 மில்லியன் தொகை திறைசேரியால் அறிவுறுத்தப்பட்டவாறு இந்த செலவீன தலைப்பின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. அத்துடன், அமைச்சானது இந்த கொடுப்பனவுடன் தொடர்பாக ஏற்பாட்டை விடுவிக்கும் கடிதத்திற்காக எந்த மேலதிக ஆவணங்களையோ அல்லது எழுத்துமூல சான்றுகளையோ பெற்றிருக்கவில்லை. | இந்த ஏற்பாட்டை சேமிப்பதற்கு கொவிட் பரவல் நிலமை பிரதான காரணமாகவிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 2020 திசெம்பர் 18 இல் அமைச்சிற்கு கோரிக்கையை சமர்ப்பித்திருந்தது. தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த கொடுப்பனவுடன் தொடர்புடைய பற்றுச்சீட்டுக்கள் மற்றும் உரிய ஆவணங்களின் பிரதிகள் நெடுஞ்சாலைகள் அமைச்சிடமிருந்து பெறப்படும். | ஏற்பாடுகளை முறையாக பயன்படுத்துவதனூடாக எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளை அடைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், அத்தகைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தால் மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டிருக்காத முன்னைய ஆண்டுடன் தொடர்பான கொடுப்பனவை மேற்கொள்ளாத வகையில் இது மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உரிய மூல ஆவணங்களும் பெறப்பட வேண்டும். |

## 2. 3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு | அமைச்சின் 2022 ஆம் ஆண்டளவில் பதில் அடிப்படையில் உள்ளகக் கணக்காய்வாளரொருரை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் | ஏற்பாடுகளின் பிரகாரம் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் கட்டமைப்பினை ஆக்கபூர்வமான முறையில் மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதும், அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து உரிய அறிக்கைகளை அனுப்புவதற்கு இயலுமானதாகவிருக்கும். | |

## 2. 4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| | அவதானிப்புகள் | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| ( அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 104(3) மற்றும் 104(4) நிதிப் பிரமாணங்கள் | 2021 ஆம் ஆண்டில் அமைச்சின் 03 வாகனங்கள் தொடர்பில் 04 விபத்துக்கள் இடம்பெற்றதுடன் உரிய பரீட்சிப்புக் குழவினை நியமிப்பதற்கும் ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் 03 மாதங்களிலிருந்து 09 மாதங்கள் வரையான காலப்பகுதி செலவழிக்கப்பட்டிருந்தது. | திருத்தங்களுக்காக வாகனங்களை கொடுப்பதில் ஏற்பட்ட காலதாமதம், காப்புறுதி மற்றும் கொரோனா பரவல் காரணமாக விசேட தீர்மானங்களை ஏற்படுத்துவதில் ஏற்பட்ட காரணம் பரீட்சிப்புக் குழுவை நியமித்து அறிக்கைகளை வழங்குவதில் காலதாமதத்தை ஏற்படுத்தியது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் விபத்துக்கள் ஏற்பட்டால் முழு அறிக்கையை சமர்ப்பிதற்கு 07 நாட்களைவிட அதிகமாக எடுத்தால் ஆரம்ப அறிக்கை உ்னடியாக சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் முழு அறிக்கை மூன்று மாதங்களிற்குள் கொடுக்கப்பட வேண்டும். அத்துடன் உரிய பரீட்சிப்புக்குழு எந்த விபத்துக்குப் பின்னரும் உரிய பரீட்சிப்புக் குழுவை நியமிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி. | அமைச்சினால் ஆகக் குறைந்தது 03 வருட காலப்பகுதிக்காக பெறுகைகள் திட்டமொன்று மற்றும் அதற்கடுத்த வருடத்திற்கான விரிவான பெறுகைகள் திட்டமொன்று 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சில் திட்டமிடல் பிரிவு தாபிக்கப்படாமையால் அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கப்பட்ட நிதியாண்டிற்கான அனைத்து அமைச்சுக்களிற்கும் வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டத்தையும் தயாரிக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்து முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 21ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 02(ii) ஆம் பந்தியின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் அமைச்சின் கீழுள்ள 03 வாகனங்கள் முறையாக எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை கையேற்றல் செயன்முறையிலுள்ளது. | வாகனங்களை முறையாக கையேற்பதற்கும் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பின்வரும் வாகனங்கள் சேவைக்கு மேலாக கால சேவைக்காக வாகனம் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில் முன்னைய அனுமதியைப் பெறாமல் வாகன திருத்தங்கள் அதே நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டதுடன் ரூபா 77,926 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முறையான ஓட்ட அட்டவணையுடன் வாகனங்களை முழுமையாக பேணவேண்டியிருந்ததுடன் கூறப்பட்ட நிறுவனங்கள் எதிர்காலத்தில் முறையான அனுமதியில்லாமல் அவ்வாறு செய்யமாட்டாது இணங்கப்பட்டது. | அமைச்சின் முன்னைய அனுமதியைப் பெறாமல் வாகனத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட முகவருக்கு புறம்பாக ஏனைய முகவர்களால் அமைச்சின் சில வாகனசேவைகள் செயற்படுத்தப்பட்ட சில சம்பங்கள் இருந்தது. | இராஜாங்க அமைச்சர் ஒருங்கிணைத்தல் செயலாளர் இராஜாங்க அமைச்சரின் கடமைகளின் தன்மையால் காலச் சேவை ஏனைய முகவரால் மேற்கொள்ளவேண்டியிருந்தது. இந்த சேவை முகவர் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட சேவை முகவராகவிருந்ததுடன் பிரதிநிதித்துவப்படுத்தும் முகவரைத் தவிர்த்து சேவைகளானது அவசரகால நிலைமைகளில் அம்பாந்தோட்டை மாவட்டச்செயலகத்தின் பதிவுசெய்யப்பட்ட முகவர்களிடமிருந்து சேவைகள் வழமையாக பெறப்பட்டது. | வாகன சேவைகள் எழுத்துமூல அனுமதி கொடுக்கப்பட்ட முகவரால் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 134(2) இன் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி விசாரணை செய்து அறிவுரை பெறக்கூடிய வகையில் அமைச்சின் நிதிசார் அலுவல்களை முறையாக, போதியளவில் மற்றும் வினைத்திறனாக மேற்கொள்ளக்கூடிய வகையில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். எனினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத்திட்டத்தை அமைச்சு தயாரித்திருத்திருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் அமைச்சானது உள்ளகக் கணக்காய்வாளரொருவரை நியமித்திருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது தாபிக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தலானது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆனால், 2022 இல் உள்ளகக் கணக்காய்வாளர் பதில் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டம் வருடாந்தம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியுடன் ஒப்பிடும் போது 26 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இது 07 சிரேஸ்ட மட்ட வெற்றிடங்கள், மூன்றாந்தர மட்ட வெற்றிடம் ஒன்று மற்றும் 10 இரண்டாந்தர வெற்றிடங்களை உள்ளடக்கியிருந்தது. | 2021 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறான அமைச்சிலுள்ள 26 வெற்றிடங்களில் பின்வரும் பதவிகளின் கீழ் 2022 ஏப்ரல் அளவில் 10 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருந்தது.<br>சிரேஸ்ட மட்டம் - 5<br>இரண்டாந்தர மட்டம் - 5<br>ஏனைய வெற்றிடங்களிற்காக உத்தியோகத்தர்களை பெறுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அத்தியாவசிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் குறித்த நேரத்தில் நிரப்பப்பட வேண்டும். |